SUMUKHA SUNDARI

சாரதா சங்கீத சபாவின்

“சுமுக சுந்தரி”

Set No. 594.

The TWIN

Tamil Text

சாரதா சங்கீத சபாவின்

" சுமுக சுந்தரி "

(இயற்றியது:—ஸ்ரீமான் இ. எஸ். சேதுமாதவராவ்)

முகவுரை.

"உண்மையான அன்பு பதவி, பட்டம் என்ற பேதமற்றது" என்பதை விளக்கும் "சுமுக சுந்தரி" என்னும் இப் புதிய நாடகம் "ஷிரீன் பர்ஹாத்" என்னும் பார்ஸீ நாடகத்தைத் தழுவி இயற்றப்பட்ட தமிழ் நாடகமாகும். இதை ரிகார்டு கொடுத்த சாரதா சங்கீத சபாவின் நடிப்பு திறமையை கானாபிமானிகள் இதற்கு முன்னமே வெளியிடப்பட்ட "பாசுபதம்" என்பதில் நன்கறிவார். காதலின்பம் கிடைக்குமென்னும் எண்ணத்துடன் சுமுகன் சுந்தரியின் பூந்தோட்டத்தில் வைகையின் கிளையை ப்ரவஹிக்கச்செய்வதும், அவள் இறந்ததாகத் தெரிவித்த பொய் வார்த்தையை நம்பி தனதுயிர் மாண்டதும், இச்செய்தியைக்கேட்ட சுந்தரியும் இவரது அன்பின் மேன்மையை அறிந்து அவளும் உயிர்துரப்பதும் இக் கதையின் விசேஷங்கள். உண்மையான காதலர் மேலுலகத்தில் சந்திக்கக்கூடுமென தேவதைகள் சொல்வது இந்நாடகத்தின் முடிவாகும். சிறந்த சங்கீதமும், அரிய நடிப்பும் இச் செட்டின் முக்கியமான அம்சங்களாகையால் இதை தவறாமல் வாங்கிக் கேட்பீர்.

சுமுக சுந்தரி

—:O:—

1-ம் பாகம். FT. 6330. Part 1

பாட்டு.

காவலர் போற்றும் மாராஜ கம்பீரா
காருண்யனே உனை போற்றினோம் தீரா
அமரலோக சபை யாகுமீதெனவே
அழகொடு ஜொலித்திடு மாசனமீதமர்ந்தே
அன்புறு பரிஜனரின்புற அவனியில்
அறிய நீதியொடு ஆட்சி செய்தே
அகிலமே புகழும் மகிபனே சுகபுனிதா
பூஜிதா புவில் (காவலர்)

ரகுவீரர்:—மந்திரி குணசீலரே! இவ்வளவு தூரம் தாங்கள் வந்தது, என்ன விசேஷம்? மேன்மைதங்கிய உங்கள் அரசர் சௌக்கியமா?

குணசீலர்:—அரசே! இறைவன் கிருபையால் எங்கள் அரசரும் நாங்களும் சௌக்யமே. மேன்மை தங்கிய எங்கள் அரசர் தங்களிடம் ஒரு சுபகாரியத்தைப்பற்றி பேசி, முடிவுசெய்ய என்னை அனுப்பியிருக்கிறார். அதாவது, பிரகித்திபெற்ற வியாபாரியாகிய கருணாகரர் மூலம் தங்கள புத்திரியின் உருவப் படத்தைப்பெற்று, அதுமுதல் தங்கள் புத்திரியின்மேல் காதல் கொண்டு அன்னவளை விவாகம் செய்துகொள்ள மிகவும் ஆவலாக இருக்கிறார். தங்கள் சம்மத மறிந்து முகூர்த்தத்தை சீக்கிரமாகவே வைத்துக்கொண்டு சந்தோஷ சமாசாரத்தை தனக்குத் தெரிவிக்கும்படி எங்களரசரின் உத்தரவு. ஆகையால் தங்களபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன்.

ரகுவீரர்:—மந்திரியாரே! மேன்மைதங்கிய ராஜசேகரரின் சம்மந்தம் எங்களுக்குக் கிடைக்கக்கூடியதல்ல. தாங்கள் இந்த மங்கள சமாசாரத்தைப்பற்றி பேசவந்ததில் அளவிலா மகிழ்ச்சி கொண்டேன். சிறிதுநேரம் இவ்விடம் தாமதியுங்கள். பூந்தோட்டத்

தில் என் புத்திரி இருப்பாள். அவளுடைய அபிப்ராயத்தை அறிந்து வந்து தங்களுக்கு முடிவு சொல்லிவிடுகிறேன்.

குணசீலர்:—சென்று வாருங்கள். நீங்கள் வரும்வரை இவ்விடமே இருக்கிறேன்.

பாட்டு.

சேடிகள்:—

மஹா சுந்தரியே மனோரம்ய
மலர் வனமா யெழிலது கண்டு
மன மகிழ்வோம் சுந்தரியே (மஹா)

சுந்தரி:—

சகி இன்பவல்லியே! சண்பகம் மல்லியே
சுகமனோகரமா சோபித மணமே ||

சேடிகள்:—

மலரின்மாலை யாம் தொடுத்தே
குலவியாடி மகிழ்வோமின்றே
தலைவியே சல்லாபமாக ||

சுந்தரி:—

தோழிகாள் நீங்கள் புகன்றதுவே சரி
புகன்றதுபோல்
சோர்விலாது ஆரவமோடு ஆடுவோம்
விளையாடுவோம் நாம் ஆடுவோம் விளையாடுவோம் ||

2-ம் பாகம். FT. 6330 Part 2

இன்பவல்லி:—சுந்தரி! என்றுமில்லாத ஆனந்தம் எனக்கு இன்று ஏற்படுகின்றது. ஏனென்றால் நீயோ பெரியவளாகிவிட்டாய். இன்னும் கொஞ்ச நாளில் உன் அழகிற்கேற்ற அரசகுமாரனை பதியாக அடைந்து சந்தோஷிப்பாயென்ற நினைவே இன்று எனக்கு இவ்வளவு குதூகலத்தைத் தந்தது. ஆனால் இவ்வளவு நாளாக ஆடிப்பாடிக் களித்த நாம், பிரிவோமென்ற நினைப்பு வந்ததும் மனக்கலக்கமேற்பட்டது.

சுந்தரி:—தோழி இன்பவல்லி! நீயும் மற்றவர்களும் உலகத்து அதிசியங்களை அறியாதவர்களைப்போல் பேசுகிறீர்கள். மலரின் மணம் மாறினதும் கசக்கி எறிவதுபோல் பெண்களின் அழகு குறைந்ததும் ஒதிக்கித் தள்ளும் அதிசய ஜந்துக்கள் நிறைந்த இவ்வுலகிலே சந்தோஷம் துக்கம் எல்லாம் எனக்கு ஒன்றே.

இன்பவல்லி:—சுந்தரி! ஏது பெருத்த வேதாந்தியாகி விட்டாயே? என்ன யோஜிக்கிருய்? அதோ தந்தையார் வருகிருர்.

ரகுவீரர்:—குழந்தாய்! நான் வந்ததையும் அறியாது, ஆழ்ந்த யோசனையில் இருக்கிருயே? என்ன விசேஷம்?

சுந்தரி:—அன்புள்ள தந்தையே! தங்கள் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று எனக்குத் தோன்றவில்லை.

ரகுவீர்:—குழந்தாய்! உன் கலக்கத்தை அறிந்தேன். உலகத்தில் ஈசன் கற்பனைப்படி உதித்த ஆண் பெண்களின் கடமையான வாழ்க்கையின்பத்தை அடையும் காலம் உனக்குச் சமீபித்து விட்டது. மனம் கலங்காதே.

சுந்தரி:—அப்பா! மக்கள் நலமே தங்கள் அழியாச் செல்வமாக எண்ணும் மாதா பிதாக்கள் தம் மக்களின் நலத்தையே விரும்புவார்கள். அப்படிப்பட்ட பாக்கியம் பெற்ற எனக்கு என்ன குறை இருக்கிறது? தங்கள் இஷ்டம் எதுவோ அதுவே என் இஷ்டம்.

ரகுவீரர்:—சுந்தரி! ரொம்ப சந்தோஷம். உன்னை சோழ அரசராகிய ராஜசேகராருக்கு விவாகம் செய்துகொடுப்பதாய் நிச்சயித்திருக்கிறேன். இந்த சந்தோஷ சமாசாரத்தை உன்னிடம் சொல்லிப்போக வந்தேன். அந்த மங்களகரமான நாளை, ஆனந்தத்துடன் அனுபவிக்க ஏற்பாடுகள் செய்துகொள். நான் போய் வருகிறேன்.

சுந்தரி:—ஆ ஹா! தந்தையோ விவாகத்தை நிச்சயித்துவிட்டார். என்னருமைத் தோழிகளையும், ஆடிப்பாடி விளையாடுவதற்கு ஏற்ற இந்த அரண்மனையையும் மனதிற்கு ரம்யத்தைத்தரும் மலர்கள் நிறைந்த இந்த உத்யான வனத்தையும், கிளி, மைனு,

மான் முதலிய இன்பஜெந்துக்களையும் பிரிந்து சம்சாரபந்தத்தி லீடுபட்டு சோழ நாட்டிற்கன்றோ சென்றுவிடுவேன்! அப்புறம் இங்குள்ளவர்களை யெல்லாம் பார்க்க முடியாமல் போய்விடுமே! எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே! ஈசனே உம்மை போற்றுகின்றேன். என் மனத்திற்கு சாந்தியளியும்.

தோழி:—பிரிய சுந்தரி! பருவ மங்கையர்கள் கணவனோடு கூடி இருக்கவே விரும்புவார்கள். நீ மட்டுமிப்படி மனம்கலங்கலாமா?

பாட்டு.

சுந்தரியே சஞ்சலமே கொண்டு நீயே வருந்தலழகாமா?
சோபித மாமனமே புரிந்தே மனமகிழ் இதுதினமே
சோகமதோ மானே அழகல்லவே தேனே (சுந்)

சுந்தரி:—

கொஞ்சியாடி மகிழ்ந்த தோழி! யானுனைப்பிரிந்தே
செல்வதென்றால் என் மனது கவலையாகுதே
எவ்வாறு சந்தோஷமே கொள்வேன் புகலுவாய் நீதோழி॥

தோழி:—

சுந்தரியே சஞ்சலமே ॥

3-ம் பாகம். FT. 6331. Part 3

ராஜசேகரன்:—இன்பசுந்தரி! இவ்விடம் வந்தது முதல் சந்தோஷமற்றவளாக இருக்கிறாயே! காரணமென்ன? இவ்விடம் என்ன குறைவு ஏற்பட்டது? என் உயிருக்கு உயிரே, உன் மதிமுகம் வாடி இருப்பதைப் பார்க்க எனக்குச் சகிக்கமுடியவில்லை. உனக்கு என்ன செய்யவேண்டுமோ அதை சங்கோஜமற்றுச் சொல்லு. உடனே நிறைவேற்றுகிறேன்.

சுந்தரி:—அரசருடைய புத்திரியாகப்பிறந்தேன்; அரசராகிய தங்களையே மணந்தேன். அதுதான் யான் உலகத்தில் கண்டது. அரசராகிய என் தந்தையாலேயே, என் மனோரதத்தைப் பூர்த்தி

செய்ய முடியவில்லை. அப்படியிருக்க பெண்களை அடிமையாக எண்ணும் தாங்களா அக்காரியத்தை செய்துதரப் போகிறீர்கள்! என் எண்ணம் ஈடேறுவது இந்த ஜென்மத்திலில்லை.

ராஜசேகரன்:—கண்ணே! அதை இன்னதென்று சொல். உன் அபீஷ்டத்தை நிறைவேற்றிவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்.

சுந்தரி:—என் தந்தையாரிடம் எங்கள் நாட்டின் வைகை நதியை நான் ஆடிப்பாடிக் களித்த என் உத்யான வனத்தின் நடுவே செல்லும் ஒரு கிளை நதியாக வெட்டித்தரும்படி கேட்டிருந்தேன். அது அவராலேயே செய்ய முடியவில்லை. அப்படியிருக்க இந்தக் காரியத்தைப் பெரிதாக எண்ணி தாங்களா எனக்கு செய்துதரப்போகிறீர்கள். இதை நினைத்துத்தான் கவலைப்பட்டேனே தவிர, வேறு ஒரு குறையும் இங்கு எனக்கு இல்லை.

ராஜசேகரன்:—சுந்தரி! இதற்குத்தானா இவ்வளவு கவலைப்பட்டாய். ஜீவ நதியும் புண்ணிய நதியுமான காவேரியையே நமது உத்யான வனத்தின் மத்தியில் செல்லும்படி செய்கிறேன். இப்பொழுதாவது மனக்கவலையை அகற்றுவாயா?

சுந்தரி:—ஆ ஹா! இன்றே சுபதினம். எனதின்ப மனோகராகிய உம்மால் என் மனோரதம் பூர்த்தியாகும் காலம் சமீபித்துவிட்டால் என்னிலும் உயர்ந்தார் யார்? நானே பாக்யவதி.

பாட்டு.

பிராண நாதா மகிழ்ந்தேனின்றே
பேதையாளென் பிழைபொறுப்பீர்
அறிய உம்குணமதே தானறியாது
நானே மனம் கோணினேன் ॥

ராஜசேகரன்:—

பிரேம ரூப மாமயிலே
நானடைந்தேன் பாக்யமின்றே
தருவாயுன் இதழாம் அமுதமே பருக
தாமதமே செய்யாதே ॥

என் இன்ப சுந்தரி! இன்று உன் மதிமுகம் மலரக் கண்டேன். அதுவே உயிரளிக்கும் ஜீவ சஞ்ஜீவியாகி நீ இட்ட வேலை உடனே பூர்த்தி செய்யும்படி என்னை அடிமையாக்கிவிட்டது. இதோ தூதர்களை யனுப்பி சாமார்த்தியசாலியான சிற்பியை வரவழைத்து உன் கட்டளையை நிறைவேற்றுகிறேன்.

4-ம் பாகம். FT. 6331 Part 4

சுமுகன்:—ஆ ஹா ! என்னே வாழ்க்கையின் விநோதம்! ஆதியில் அதி சந்தோஷமாக இருந்த என்னுடைய குடும்பத்தில் ஒருவர் பாக்கி இல்லாது எல்லோரையும் இழந்து தனியனாகினேன் தேவா !

பாட்டு.

சதாவே யான் சிந்தையே நொந்துமே வாட
மஹா தேவா விதாதவாம் வேதா
விதித்தானோ புவில் உத்தமர்க்கருள்
சீல குணனே உனை போற்றினேன் தேவா
உலாச மெய்யாம் வாழ்வதே தந்தாண்டருள்
சுகமிலா வாழ்விதே வேண்டிலேன்; நீ தாயின்றாளே
சகாயமுன் பாதாரமே தானே கெதியாகுமே ||

ஆ ஹா! என்ன மதிமருண்டவன் போல் பிதற்றுகின்றேன்! நான் படித்த படிப்பெல்லாம் எங்கே போய்விட்டது? மஹா தீரனாகிய நானல்லவா இப்போது மனக்குரங்கிற்கடிமையாகி விட்டேன்! மனமே, உன்னை வணங்குகிறேன். என்னை நல் வழியில் செலுத்து. தேவா, என்னை சோதியாதீர்.....என் விதி என் வாழ்வெல்லாம் இப்படியே கழிந்துவிடுமோ? என்ன மதியிழந்து மறுபடியும் பிதற்றுகின்றேன். ஈசன் நம்மை கலங்கவிடமாட்டான். அவர் எண்ணத்தை அறிந்தார் யார்?

சிப்பாய்:—சுமுகா! எப்பொழுதும் உணர்ச்சியற்று இப்படி தனிமையாக என் புலம்பிக்கொண்டிருக்கிறாய். உன்னுடைய அற்புத சிற்பத்

தொழிலாளன் புகழ் பிரகாசிக்கும் காலம் நெருங்கிவிட்டது. நமது அரசர் தமது இளமனைவியின் ஆவலை பூர்த்தி செய்யும் பொருட்டு காவேரியை ஒரு கிளை நதியாகத் திருப்பி அந்த புரத்தின் உத்யான வனத்தின் நடுவே செல்லும்படியாக செய்வதற்கு உன் போன்றவர்களை தேடி யழைத்துவர உலகமெங்கும் தூதர்களை அனுப்பியிருக்கிறார். அதில் நானும் ஒருவன். உன்னைப்பற்றி கேள்விப்பட்டு இங்கு வந்தேன். கவலை விடு. உடனே புறப்படு, பெரும் புகழ் பெறுவாய்.

சுமுகன்:—சஞ்சல மனத்திற்கு சாந்தியளித்தீர். கடவுள் கிருபையால் அரசரின் எண்ணத்தை பூர்த்தி செய்வேன். இதோ புறப்பட்டு விட்டேன். வாரும் அரசரிடம் போவோம்.

5-ம் பாகம். FT. 6332 Part 5

ராஜசேகரன்:—கண்ணே சுந்தரி! உன் எண்ணம் பூர்த்தியானதாகவே எண்ணிக்கொள். நமது மந்திரியார் மிகச்சிரமப்பட்டு ஒரு சிற்பியை அழைத்துவந்திருக்கிறார். அவன் இங்கு வருவான். சிற்ப சாஸ்திரத்தில் அவனின் மிக்கோர் இவ்வுலகத்திலேயே இல்லையாம்.

சிப்பாய்:—மஹாராஜா! இவர்தான் அந்த சிற்பி?

ராஜசேகரன்:—அப்படியா! சந்தோஷம். இவ்வாசனத்தில் அமருங்கள்.

சுமுகன்:—மஹாராஜா! நமஸ்காரம்..... ஆ ஹா! என்ன மனோகர உருவம் பூலோக வனிதயரில் இவ்வளவு எழில்வாய்ந்த மங்கையை நான் எங்கும் கண்டதில்லை, அத்தேவலோக மங்கையாகவே இருப்பாளோ? இந்த ஜெகன்மோகினியை கண்டதும் என் மனம் சபலிக்கின்றதே. ஆ ஹா! என்ன மனமாற்றம்!

ராஜசேகரன்:—உமது பெயரென்ன ?

சுமுகன்:—என் பெயர் சுமுகன்!

ராஜசேகரன்:—நீர் சிற்ப சாஸ்திரத்தில் தேர்ந்தவரென்று இப்பொழுது

நமது மந்திரியாரின் மூலமாக கேள்விப்பட்டேன் சிற்பக் கலையின் அற்புதமான செயல்களெல்லாம் செய்து காட்டுவீரா ?

சுமுகன்:—அரசே ! சாதாரணமான கல்லினால் அழகிய தெய்வ விக்ரகங்களாகவும், மனித உருவங்களாகவும் சிருஷ்டிப்பேன். அது மிக அழகாக இருக்கும். ஆனால் அதற்கு உயிர்கொடுக்க மாத்திரம் என்னால் முடியாது. அவைகளைப்போல் தோன்றச்செய்ய எனக்குச் சாமார்த்தியமுண்டு.

சுந்தரி:—சுமுகரே ! உம்முடைய சாமார்த்தியத்தைப்பற்றி சந்தேகிக்கவில்லை. என் மனப்போல் அக்காரியத்தை செய்துவிட்டீரானால் உம் மனதில் நினைத்திருப்பதைவிட அதிகமான லாபமே இவ்விடம் கிடைக்கும்.

சுமுகன்:—தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. தங்கள் எண்ணம் இன்னதென்று தெரிந்தால் பகவான் கிருபையால் செய்து முடிப்பேன்.

ராஜசேகரன்:—சுமுகரே ! என் இன்ப சுந்தரி கோருவது ஜீவநதியாகிய காவேரியை அவளது உத்யான வனத்தின் மத்தியில் செல்லும்படி ஒரு கிளை நதியாக வெட்டவேண்டும். அது உம்மால் முடியுமா ?

சுமுகன்:—அரசே ! மனிதனால் முடியாத காரியமென்பது உலகத்திலில்லை. அப்படியிருக்க, மனிதன் தான் செய்யும் காரியங்களில் சோர்ந்து தவறிவிடுவதற்குக் காரணம், ஊக்கமின்மையே. எனக்கு ஆகாத காரியம் ஒன்றுமில்லை. தங்களெண்ணம்போல் செய்கிறேன்.

ராஜசேகரன்:—சுமுகரே! சந்தோஷம். மஹா புத்திமானாகிய நீர் அக்காரியத்தை செய்து முடிப்பீர். சந்தேகமில்லை. உமது தொழிலை ஆரம்பியும். தர்பாரில் வேலையிருக்கிறது, சென்றுவருகிறேன்.

சுந்தரி:—சுமுகரே ! தைரியமாக இந்த வேலையை செய்து முடியும். பெரும்புகழோடு ஏராளமான செல்வமும் பெற்று, சந்தோஷமான வாழ்க்கை நடத்துவீர்.

சுமுகன்:—ஜெகன் மோகினி! ஆட்கொல்லியாகிய பொருளையும், பிரபுத் தத்துவத்தையும் வேண்டவில்லை. நான் விரும்புவது பூரண மான தங்கள் உள்ளன்பே. அதுவே என் தொழிலை பூர்த்தி செய்ய உற்சாகமளிக்கிறது. அந்த அன்புக்கு மேலான பொருள் உலகத்திலில்லை. அந்த அன்பைப் போற்றி என் தொழிலை ஆரம்பிக்கச் செல்கிறேன்.

பாட்டு.

சான்றோர் உள்ளம் இலங்கிடும் மாகாருண்யா
சுத்தமாகும் மெய்யன்பே தந்தாள் கண்யா
சுந்தரி நாமம் சந்ததம ஜெபித்தே நதிவெட்டி
இன்றே யடைவேன் வெற்றி சந்தோஷந்தானே
தேவியா மோஹினி தான் கொள்ளச் செய்குவேன்
(சான்றோர்)

6-ம் பாகம். FT. 6332 Part 6

சுமுகன்:— கடவுளே! உன் கிருபையால் செய்துமுடித்த வேலைக்குச் சன்மானமாக அந்த மோகன சுந்தரியின் அன்பையும் உன் னருளால் அடைவேன். அவள் என் வரவை எதிர்பார்த்திருப்ப தாக தோழி சொன்னாள். அவள் எண்ணம் பூர்த்தியான சந்தோஷ மிகுதியால், அதோ பாடுகிறாள்.

பாட்டு.

சுந்தரி:—

மஹா பாக்யமதே இன்று யானடைந்தேன்
மாதேவ சதாசிவனே கருணாகர ரூபமனோகரனே
ஆ ஹா சந்தோஷமானேன் இனியாரே எனக்குச்சமானம்
அதிதீர சுமுகரை காரும் அரவா பரண நீரும் (மஹா)

இன்பவல்லி:—அம்மா! உங்கள் எண்ணத்தை நிறைவேற்றிய சுமுகர் வந்திருக்கிறார்.

சுந்தரி:—சரி, நீ சென்று உன் வேலையைக்கவனி, நான் அவரை உபசரிக்கிறேன். சுமுகரே, வாரும் உம்முடைய கஷ்டத்திற்குத் தகுந்த சன்மானமாக எதுவேணுமோ அதைக்கேளும்.

சுமுகன்:—நான் செல்வத்தையும், பதவியையும் விரும்பவில்லை. எனக்கு செல்வவானும், ஏழையும் சமமே. யான் விரும்புவது அழியாத செல்வமாகிய அன்பே. அது பட்டம், பதவி ஒன்றையும் கவனிக்காது. அப்படிப்பட்ட இன்பமாகிய அன்பையே தங்களிடம் வேண்டுகிறேன்.

சுந்தரி:—பதவி, செல்வம் வேண்டாமென்கிறீர். நீர் கோரும் அன்பு இன்னதென்று விளங்கவில்லை. அதை விபரமாகச் சொல்லலாமா?

சுமுகன்:—ஆ ஹா! தாங்கள் கேட்டபிறகு சொல்லத்தடையென்ன? அதாவது:—

விருத்தம்.

உலகிலே ஒப்பிலா உன்னதக் கொள்கையாய்
நிலைப்பெரும் நிர்மல ஞசியை பெற்றதாய்
கலைகளும் போற்றிடும் கவிநயம் வாய்த்ததாய்
நிலவிடும் அன்பே நின்பால் வேண்டினேன் ||

ஹ்ருதய கமலமாகிய பூவில் உற்பத்தியாகும் அன்புதேனையே யான் விரும்புகிறேன். அது எனக்கு கிடைக்குமோ, கிடைக்காதோ?

சுந்தரி:—நீர் புகல்வது மறைபொருளாக இருக்கிறது. அது இன்னதென்று மனம் விட்டு என்னிடம் சொல்லும். அது உமக்குக் கட்டாயம் கிடைக்கும்.

சுமுகன்:—கட்டாயம் கிடைக்குமா? ஆ ஹா! நானே பாக்யவான்! மோஹினி, என் மனதைக் கொள்ளை கொண்டது தங்கள் ஜெகன்மோகன விக்ரகமே!

சுந்தரி:—சுமுகரே! உம்மை யோக்யரென்று நினைத்தேன். சீக்கிரம்

இவ்விடத்தை விட்டுச் செல்லும்! இல்லாவிட்டால் யானே உம்மைக் கொல்லநேரிடும்.

சுமுகன்:—ஆ ஹா! சுந்தரி! எண்ணம் ஈடேருத அபாக்யவாஞகிய என்னை உன் கையால் முடித்துவிடு! சந்தோஷமாக உயிர் துறப்பேன். அன்பே, ஏன் பதிலைக் காணும்?.....ஐயோ அந்த மனமோகன விக்ரகம் மறைந்து விட்டதே. இனிமேல் என் எதிர்படாது. எனக்கு ஜீவனளிக்கும் அந்த புனித நாமத்தை ஜெபித்துக்கொண்டே என் வாழ்நாள் கழிய வேண்டியதே! ஹா, சுந்தரி! சுந்தரி! சுந்தரி! சுந்தரி!

7-ம் பாகம். FT. 6333 Part 7

ராஜசேகரன்:—மஹாபலசிங்! உன்கூட அழைத்துவந்திருக்கிருயே, அவன் யார்? அவனைப் பார்த்தால் கொஞ்ச நாளைக்கு முன் காவேரியை நமது உத்யான வனத்தின் மத்தியில் செல்லும் படி செய்த சுமுகன் போலல்லவோ தோன்றுகிறது. அவன் பேசாமல் வருகிருன். அவனைஏன் இழுத்துக்கொண்டு வந்தாய்?

சிப்பாய்:—மஹாராஜா! இவன் புனிதமான பெயரை அசுத்தம் செய்கிருன். அந்தப்பெயரை எப்பொழுதும் புலம்பிக்கொண்டு திரிகிருன்.

ராஜசேகரன்:—அவன் சொல்லிக்கொண்டு திரியும் பெயரென்ன?

சிப்பாய்:—அரசே! சமுகத்தில் சொல்ல பயமாக இருக்கிறது.

ராஜசேகரன்:—பயப்படாதே, எதுவாக இருந்தாலும் தைரியமாகச்சொல்.

சிப்பாய்:—மேன்மை தங்கிய மகாராணியின் பெயரை சொல்லி நமது அரண்மனை மதில் சுவற்றில் மண்டையை இடித்துக் கொள்கிருன்.

ராஜசேகரன்:—ஆ ஹா! அப்படியா? அடே அற்பநாயே, சுந்தரியின் மேல் ஆசைப்பட்டா இப்படி திரிகின்ருய்? அடே, நீ இவ்வூர் அரசஞ, இப்பதவி உனக்குக் கிடைக்குமா?

சுமுகன்:—எனக்கு நானே அரசன். ஆண்டவன் சந்நிதியில் அரசனும், ஆண்டியும் ஒன்றே. களங்கமற்ற என் மனமானது, அந்த மனமோகன சுந்தரியின் ரூபத்தில் ஈடுபட்டுவிட்டது. அந்த நாமத்தை மறக்க என்னால் முடியாது. அதை மறக்கும்படி செய்ய, என்னைப் படைத்த ஆண்டவனால்கூட முடியாது.

ராஜசேகரன்:—என்ன சொன்னாய்? இதோ உன்னை இந்த வாளுக்கு இரையாக்குகிறேன்.

குணசீலர்:— மஹாராஜா! பொறுங்கள்.

விருத்தம்.

சீரிய நிதியோடு செங்கோலோச்சியே
பாரினையாளும் பார்த்திபா கேளும்
யாருமே கெதியிலா அற்பனும் இவன்மேல்
சீறுவதழகல்ல செப்புவேனுபாயந்தானே ||

ஆகையால் இவன் முடிவை அவனே தேடிக்கொள்ளும் மார்க்கத்தை யான் சொல்லுகிறேன். அதாவது, நமது நகரத்தில் சமீபத்திலிருக்கும் மலையின்மேல் உருண்டையான ஒரு பெரும் கல் பொருந்தியும் பொருந்தாமலும் இருக்கிறது. அந்தக் கல்லை உடைத்துவரும்படி இவனை அனுப்பினால், அந்தக் கல்லை உடைக்கும் காலத்தில் இவன்மேல் அது விழுந்து இவன் உயிரை முடித்துவிடும். அதுவன்றி, இவனை தாங்கள் கொன்றால், தங்களுக்கு அபகீர்த்தி ஏற்படும். பிறகு தங்கள் இஷ்டம்.

ராஜசேகரன்:—மந்திரியாரே! நல்ல யுக்தி செய்தீர். ஏ, சுமுகா!

விருத்தம்.

இந்த மாநகர்க்குயிர்க்கையாம் காக்ஷி
தந்திடும் மலைமேல் தனியாக ஒரு கல்
பந்துபோல் நிற்பதை பலதுண்டாக்கி
வந்தனையானால் மகிழ்வாய் மனமே ||

இந்தக் காரியத்தை முடித்தாயானால் சுந்தரியை அடைவாய்.

சுமுகன்:—ஆ ஹா ! இதோ செல்லுகிறேன். என் ஜீவாதாரமான சுந்தரி எனக்குக்கிடைப்பதானுல் இந்த மலையல்ல அந்த மஹாமேரு பர்வதமேயானுலும் தவிடுபொடி யாக்கிவிடுகிறேன். செல்லு கின்றேன். சுந்தரி, உனக்காக செல்லுகிறேன்.

8-ம் பாகம். FT. 6333. Part 8

சுந்தரி:—அந்தோ ! சுமுகா ! அன்று உன் மனத்தை கூறிணுய். சிறிவிழுந் தேன். இன்று பாவியாகிய என்னை அடைய உயிரிழக்கத் துணிந்தாய். உன் அன்பின் ஆழம் காணுது என் பதவியின் திமிரினுல் இகழ்ந்தேன். உன் சுந்தர வதனம் காண அந்தகா ரத்தையும் கவனியாது நீ இருக்குமிடம் நாடி என் கால்கள் நடக்கின்றன. ஈசா, வழியில் இடர்நேராது காரும்.

பாட்டு

சுமுகன்:—

சுகம் தரும் இளமாமதிபோல இலங்கிடும் எழில்மானே
அகமதிலுந்தன் நாமம் ஜெபித்தே யானே புவிமீ
துயர்ந்தேன்

அழகியே உனக்காக உயிர் தரிக்கும்
பாவிக்கே ஜீவனளித்தே போக ॥

சுந்தரி ! இந்த மலை உடைந்து என் தலையில் விழுந்து நானிறந் தால், என்னை சமாதியில் அடக்கம் செய்து, என் சமாதியின் மேல், உன் கேசத்தில் அணிந்து வாடிய புஷ்பத்தையாவது சூட்டுவாயா ?

சுந்தரி:—ஹா, சுந்தரா ! கபடியாகிய என்னை காவல் கடந்துவரச் செய் தது உன் மெய்க்காதலன்றோ. சுமுகா ! ஏன் கஷ்டமான வேலைசெய்து உடம்பை வருத்திக்கொள்கிருய் ?

சுமுகன்:—தாயில்லை, தந்தையில்லை, சுற்றமில்லை. யான் ஓர் அனுதை. எதற்காக ஜீவித்திருக்கிறேனென்ருல் என் சௌந்தரிய மோஹினியை அடையவே.

சுந்தரி:—அந்த மோஹினியை யாரென்று சொல்ல பயப்படக் காரணம்.

சுமுகன்:—பயமே.

சுந்தரி:—ஏன் ?

சுமுகன்:—என் ஜீவ மோஹினி எதிரில் வந்து கேட்டால் சொல்லுவேன்.

சுந்தரி:—அந்த மோஹினியின் நாமமென்ன ?

சுமுகன்:—சுந்தரி !

சுந்தரி:—சுமுகா ! மயக்கமுருதே. இதோ உன் சுந்தரி வந்திருக்கிறேன் பார்.

சுமுகன்:—ஆ, சுந்தரியா ! சுந்தரி, என் கண்ணே ! ஒன்றும் புறியவில் கண் இருண்டுவிட்டதே? மயக்கம் வருகிறதே ! ஹா ! சுந்தரி, சுந்தரி.

சுந்தரி:-ஐயோ சுமுகா! கண்விழித்துப்பார். அபலை என்னை கதறவிடாதே. என்னை உள்ளன்போடு நேசிக்கிருய். என்னையுமறியாமல் என் மனம் உன்னை நேசிக்கிறது. இந்த ஜென்மத்தில் ஒருவருடைய மனைவியாகிய யான் உன்னை அடையமுடியாது. ஆண்டவன் மறு ஜென்மத்தில் நம்மிருவரையும் ஒன்று சேர்ப்பார். அன்பா, நேரமாகிறது, போய்வருகிறேன். வருந்தாதே! என்னை மறந்து விடு.

சுமுகன்:—சுந்தரி ! இரக்கமில்லையா ? போய்விட்டாயா ?

பாட்டு.

அந்தோ சுந்தரியே எனைத்தானே
ஆவி துடிக்கவைத்தே எங்கு போனாய்
மாரியில்லா பயிர்போல வாடி
தானே வருந்திய எனக்குயிர் தந்தோடி (அந்)

சிப்பாய்:—அந்தோ! கர்மவீரனுகிய சுமுகனை கஷ்டமான வேலைசெய்யும் படி ஏவி, அவன் எண்ணத்தை பூர்த்தி யாக்குகிறேனென்று அவனுக்கு ஆசைகாட்டி, அந்த காரியத்தில் ஜெயமடையும் தருணத்தில் இருக்குமவனை மடியச்செய்யும் பாபம் எனக் கன்றுநேர்ந்தது! மனமில்லாது போனுலும் அரசன் கட்டளை என்று மதித்தல்லவோ இந்தக் காரியத்தைச் செய்யவேண்டி யிருக்கிறது. உயிரோடிருக்கும் ஒருவரை இறந்ததாகப்பொய் சோல்லி நிரபராதியாகிய ஒருவனை உயிர் துறக்கச் செய்யும் பழியை எற்றுக்கொண்டேன். ஈசனே, என்மேல் குற்றமில்லை. என்னைக்காப்பாற்றும். அதோ, அவன் உற்சாகமாச பாடிக் கொண்டே தன் கடமையைச்செய்கிறுன்.

பாட்டு.

சுமுகன்:—

சுந்தரியே எந்தன் ஜீவமோகினியே ஏழையான்
உந்தன் நாமம் சொல்லியே இம்மாயமலையை
உடைக்கிறேன்
இந்த வேலைதான் முடிந்தால் எந்தொழிலே யானுனை
இப்புவியில் தான் பெறுவேன் ஒப்பெனக்கு யாரடி (சுந்)

சிப்பாய்:—சுமுகா! மனிதனுடைய எண்ணப்படி ஒன்றும் நிறைவேறுவதில்லை. அதைச்சொல்லவே இங்குவந்தேன்.

சுமுகன்:—எனக்கு உலகசமாசாரம் வேண்டியதில்லை. இந்த உலகத்தில் எனக்கிருக்கும் ஐச்வரியமெல்லாம் சுந்தரியே.

சிப்பாய்:—"சுந்தரி! சுந்தரி!" என்று அழுதுக்கொண்டிருப்பது உன் விதிபோலும்.

சுமுகன்:—நீ சொல்வதொன்றும் விளங்கவில்லையே?

சிப்பாய்:—சுமுகா! உன் விஷயமாக அரசரிடம் சுந்தரி பரிந்து பேசினாள். அப்போது அவளை அரசர் கோபத்தால் திட்டினார். அது பொறுக்காது அவள் விஷந்தின்று உயிர் துறந்தாள்.

சுமுகன்:—என்ன ? சுந்தரி இறந்தாளா? இல்லை, நீ சொல்வது பொய்.

சிப்பாய்:—பொய்யல்ல! உண்மையாகவே இறந்தாள்.

சுமுகன்:—ஹா, கண்ணே சுந்தரி! மடிந்தாயா ஐயோ? உலகமே மடிந்து விட்டதே! சுந்தரி, இதோ வந்தேன். அஞ்சாதே! மேலுலகில் உன்னை சந்திப்பேன்! சுந்தரி! சுந்தரி!

பாட்டு

ஹா மடிந்தாயோ ஜீவனே ஹா மடிந்தாயோ
அரும் ஜீவனே ஹா மடிந்தாயோ
எனதரும் ஜீவனே ஹா மடிந்தாயோ
மானினியே இதோ வருகிறேனேடி
மயங்காதே இருக்மிடந்தனை தேடி (என)

10-ம் பாகம். FT. 6334 Part 10

சுந்தரி:—ஆ சுமுகா! என் புருஷர் சதிசெய்து நான் இறந்ததாகச்சொல்லி உன்னை முடித்தார். பாவியாகிய நான் மடிந்தேன் என்பதைக் கேட்டு உயிரை விட்டாயே? அன்பா, உன் முடிவை நினைக்க நினைக்க என் மனம் நடுங்குகிறதே! உன் காரியத்தில் ஜெய மடைந்து என்னைப் பார்க்கவருவாய் என்று எதிர்பார்த்திருந்த என் எண்ணத்தில் மண்ணைத்தூவி பிணமாகிவிட்டாயே! சுமுகா, இந்தப்பேதை

பாட்டு

வருந்தி மனமேங்கிக் கதறவிடுத்து மாண்டீரோ
மஹா சத்ய சீலனே அனாதியைப்போல் உதவ யாரு
மின்றி நீரே

அந்தோ இந்த மாய வாழ்வை உதரிநீரோ! நீதா
நீ சென்ற விடமே வருகிறேன் நாதா (வரு)

தேவா, இவ்வுலக வாழ்க்கையை விரும்பவில்லை. நீர் கருணையுடைவராஞல், என் காதலருடன் என்னைச்சேரும். சுமுகா! சுமுகா! சுமுகா!

அசரீரி:—களங்கமற்ற காதலர்களே! அதோ தேவவிமானம் வந்திருக்கிறது. அதில் எறிச்சென்று மேலுலகில் இன்பமான வாழ்க்கையை நடத்துங்கள்.

சுபம். சுபம். சுபம்.

"ட்வின்" ரிகார்டுகளை பாடுவிக்க

"ட்வின்" ஊசிகளையே
உபயோகித்து வருவதில்
உங்கள் ரிகார்டுகள்
நீண்டகாலம் இன்பமான
ஸங்கீதம் அளிக்கும்.

சுமார் 200 ஊசிகளடங்கிய டப்பி விலை 6 அணு மாத்திரமே.

படி சோதிக்கவேண்டும்! குழந்தை இல்லாக்குறைக்குத் தங்களிடம் நான் முறையிட்டால், குழந்தை ரூபத்துடன் நீரே கணப்பொழுது இருந்து மறைந்துவிட்டீரே! உம் ரகசியத்தை அறியநான் வல்லமை யுள்ளவனோ? எனிந்தச் சோதனை?

பாட்டு.

ஆதாரமுனையன்றி அவனியிலேது
அரவாபரணா நீ பரிபாலித்தாலும்
முனமந்த மார்கண்டன் தனைகார்க்க நீரே
கணந்தன்னில் மரலியை மடித்துயிர் தந்தாய் ॥

பரமசிவன்:—என் பரம பக்தனான வல்லாள வேந்தே, உன் பக்திக்கு மிகவும் மெச்சினேன். நானே உனக்குக் குழந்தையாய்த் தோன்றினேன். இனி நீ க்ஷேமமாய் அரசாண்டு வா. அந்திய காலத்தில் பிதாவுக்கு புத்ரன் செய்யவேண்டிய சடங்குகள் எல்லாவற்றையும் நானே உனக்கு செய்கிறேன். நீ என்னை புத்ரனாயடைந்த பெருமையை உலகத்தோர் சாச்வதமாய்க் கொண்டாடுவார்கள்.

வல்லாளன்:—ஹே ஜகத்ரக்ஷகா! மின்னல்போல் உமாதேவியுடன் விருஷபாரூடராய்த் தோன்றி மறைந்தீரே. இப்படியே உமது திருவுளம் எங்கள் பிள்ளைக்கலி தீர்த்து வைத்து எங்களை புத்தென்னும் ரகத்திலிருந்து கரையேற்றி வைத்த கருணா மூர்த்தி!

பாட்டு.

அருஞ்சோதி தெய்வமென்னை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தேயாடுகின்ற ஆனந்த தெய்வம்
திருப்பாடலுவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சித்ஸபையில் விளங்குகின்ற தைவமிதே தெய்வம் ॥

Hosali Power Press, Bangalore.